**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.20**

**தேதி: 17.11.2025**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சங்கர் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஆவடி காவல் ஆணையர் அலுவலகத்தில் பொன்னேரி சரக காவல் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வருகிறேன் நான் கடந்த 19.02.2013 ம் தேதி 17.30 மணிக்கு சிவகங்கை தாலுகா காவல் ஆய்வாளராக பணிபுரிந்த சயமத்தில் அதே காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.செல்வகுமார் அவர்களால் பதிவு செய்யப்பட்ட சிவகங்கை தாலுகா காவல்நிலைய குற்ற எண்.120/2013 சட்டப்பிரிவுகள் 174 குவிமுச படி பதிவு செய்த வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு வைத்தார். அதை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே சம்பவ இடமான பனங்காடி– காட்டுசூரை செல்லும் ரோட்டில் டீக்கடை மாணிக்கம் என்பவரது இடத்தில் கிணறு போன்ற இருந்த பள்ளமான இடத்தை சாட்சிகள் முத்து மற்றும மதியழகன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.19**. பின்பு புகார்தாரர் நாட்டரசன்கோட்டை குரூப் கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பு பனங்காடி குரூப் திரு.மதிவாணன் பனங்காடி கிராம உதவியாளர் நாராயணன் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் பனங்காடி திரு.உடையப்பன், மாணிக்கம், முத்து, மதியழகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சம்பவ இடத்தில் எறிக்கப்பட்ட கிடந்த எலும்பு துண்டுகள் அதன்மீது காணப்பட்ட எறிந்த நிலையில் உள்ள போர்வை, சிகப்பு கலர் கட்டம் போட்ட சண்டை, முடிச்சு போட்ட கயிறு, பெல்ட்டுடன் உள்ள பேண்ட், கரிக்கட்டை, வெள்ளை

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.17 18:48:53 +0530

கலர் சட்டை துணி இவை அனைத்தும் எறிந்த நிலையில் கிடந்ததை பார்க்கும்போது மனித எலும்பு துண்டுகள் தான் என்றும், முன் விரோதம் காரணமாக திட்டமிட்டு கொலை செய்து யார் என்று தெரியாமல் இருக்க எறிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கில் கிணற்றிற்குள் மனித எலும்பு துண்டுகள் மண்ணுக்குள் புதைந்து கிடப்பதை தோண்டி பிரேத பரிசோதனை செய்ய வேண்டியிருப்பதால் சிவகங்கை வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து சிறப்பு உதவி ஆய்வாளர் மாரிமுத்து என்பவர் மூலம் கொடுத்தனுப்பினேன். மேலும், சம்பவ இடத்தில் போதுமான வெளிச்சம் இல்லாமல் இருட்டாக இருந்ததால் அங்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடு செய்தேன். பின்பு 20.02.2013 மறுநாள் சம்பவ இடம் சென்று சிவகங்கை வட்டாட்சியர் முன்னிலையில் தோண்டி எடுத்து பஞ்சாயத்தார்கள் சந்திரசேகர், அழகு, ஆறுமுகம், செல்வராஜ் மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை புலனாய்வு அறிக்கை தயார் செய்து அதில் பஞ்சாயத்தார்கள் கையொப்பம் பெற்றேன். அந்த புலனாய்வு அறிக்கை **அ.சா.ஆ.20**. மேலும் சம்பவ யிடத்தில் கைப்பற்றப்பட்ட எறிந்த கருப்பு நிற மண், சாதாரண மண், எறிந்த நிலையில் உள்ள போர்வை, எறிந்த நிலையில் உள்ள பெல்ட்டுடன் கூடிய பேண்ட், எறிந்த நிலையில் முடிச்சுடன் கூடிய நைலான் கயிறு, எறிந்த நிலையில் வெள்ளை கலர் சட்டை, எறிந்த நிலையில் போலீஸ் என்று லேபிள் உள்ள சிகப்பு நிற கட்டம் போட்ட சட்டை, எறிந்த கரிக்கட்டை துண்டு ஆகியவற்றை சாட்சிகள் முத்து மற்றும் மதியழகன் அவர்களின் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எலும்பு துண்டுகள் மீது பிரேத விசாரணை முடிக்கப்பட்டு அவை ஆணா? பெண்ணா? மற்றும இறந்தவர் யார் இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு சம்பவ இடத்தில் வைத்து ஒரு மருத்துவ குழு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி மு.நி.கா. முத்துபாண்டி என்பவர் மூலம் சிவகங்கை அரசு மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். அன்றே சுமார் 14.15 மணிக்கு மருத்துவ குழுவினர் சம்பவ யிடம் வந்து மேற்படி எலும்பு துண்டுகளை சம்பவ யிடத்திலேயே வைத்து பிரேத பரிசோதனை செய்து அந்த எலும்புதுண்டுகளை ஆய்வுக்கு அனுப்ப வேண்டி சேகரிக்கப்பட்டது. எதிரியை பற்றி விசாரணை செய்து கொண்டிருந்த நிலையில் 21.02.2013 சுமார் 8.30 மணிக்கு

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.17 18:49:02 +0530

நாட்டரசன்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் திரு.மதிவாணன் மற்றும் பனங்காடி கிராம உதவியாளர் திரு.நாராயணன் ஆகிய இருவரும் இவ்வழக்கின் எதிரியான பணங்காடியை சார்ந்த முத்துராமலிங்கம் மகன் செந்தில் என்பவர் அவர் அலுவலகத்தில் இருந்த போது சுமார் 8.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜராகி இறந்துபோன பெத்தலிஸ் வாத்தியாரை நானும், தனது அக்கா மகன் சதிஷ் மற்றும் வெள்ளைச்சாமி ஆகிய மூவரும் சேர்ந்து கொலை செய்து கிணற்றுக்குள் போட்டு அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக தீ வைத்து எறித்ததாக சொன்ன வாக்குமூலத்தை கேட்டு எதிரி செந்திலை என்னிடம் காவல்நிலையத்தில் ஆஜர் செய்தார். பின்பு 08.30 மணிக்கு சாட்சிகள் நாராயணன் மற்றும் மலைச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் காவல்நிலையத்தில் வைத்து மேற்படி எதிரி செந்தில் என்பவரை விசாரணை செய்த போது அவர் எந்தவித துன்புறுத்தலும், வற்புறுத்தலும் இன்றி தானாக முன் வந்துகொடுத்த வாக்குமூலத்தை 8.30 மணி முதல் பதிவு செய்தேன். அதில் என்னை கூட்டி சென்றால் சம்பவயிடத்தையும், கிணற்றுக்கு பக்கத்தில் முட்புதர்க்குள் தூக்கி எறிந்த 10 லிட்டர் வெள்ளைநிற மண்ணெண்ணெய் கேனையும், கொலைக்கு பயன்படுத்திய உருண்டை செந்நிற கல்லையும் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று கூறி சம்பவயிடம் 10.30 மணிக்கு சென்று அதே சாட்சிகள் முன்னிலையில் கிணற்றுக்கு பக்கத்தில் முட்புதர்க்குள் இருந்து 10 லிட்டர் மண்ணெண்ணெய் கேனையும், உருண்டை செந்நிற கல்லையும் சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.21**. அந்த மகஜர் **அ.சா.ஆ.22**. பின்பு வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் கொண்டு வந்து பிரேத பரிசோதனை செய்து பராவசம் ஒப்படைத்தேன். பின்பு 1வது எதிரி செந்தில் என்பவர் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி மற்ற எதிரிகளை தேடி வந்த நிலையில் கிடைத்த தகவலின் படி 3ம் எதிரியான வெள்ளைசாமி என்பவர் அதே நாளில் 14.00 மணிக்கு சிவகங்கை காமராஜர் காலணி பஸ் ஸ்டாப்பில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்து எந்தவித துன்புறுத்தலும், வற்புறுத்தலும் இன்றி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்பு 16.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பராவசம் ஒப்புவித்தேன். பின்பு சாட்சிகள் மதிவாணன், நாராயணன், உடையப்பன்,

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.11.17 18:49:12 +0530

மாணிக்கம் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் மரியராணி, பெமிலாகிரேஷ், ஜெமிலாகிரேஷ், ஜனோசி, செல்லசாமி, மரியஸ்டீபன், சுகுமாறன்நாயர் மற்றும் மலைச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகள் செந்தில் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர்களை உறவினர்களுக்கு கைது பற்றி விபரம் தெரிவித்து சட்டபிரிவுகள் 174 குவிமுச லிருந்து பிரிவு 302, 201 இதச–வாக பிரிவு மாற்றம் செய்து தனி அறிக்கையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். அந்த தனி அறிக்கை **அ.சா.ஆ.23**. நான் கைப்பற்றிய சான்றுபொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்ட எறிந்த கருப்பு நிற மண், சாதாரண மண், எறிந்த நிலையில் உள்ள போர்வை, எறிந்த நிலையில் உள்ள பெல்ட்டுடன் கூடிய பேண்ட், எறிந்த நிலையில் முடிச்சுடன் கூடிய நைலான் கயிறு, எறிந்த நிலையில் வெள்ளை கலர் சட்டை, எறிந்த நிலையில் போலீஸ் என்று லேபிள் உள்ள சிகப்பு நிற கட்டம் போட்ட சட்டை, எறிந்த கரிக்கட்டை துண்டு ஆகியவற்றை ஒப்படைத்த படிவம் 91 **அ.சா.ஆ.24**, உருண்டை செந்நிற கல் மற்றும் சுமார் 10 லிட்டர் வெள்ளைநிற பிளாஸ்டிக் கேனை ஒப்படைத்த படிவம் 91 **அ.சா.ஆ.25**. உருண்டை செந்நிற கல் சா.பொ.11. பின்பு தலைமறைவு எதிரியான சதிஷ் என்பவரை தேடி வந்த நிலையில் 21.02.2013 ம் தேதி வாடிப்பட்டி நீதிமன்றத்தில் சரணடைந்துவிட்டார் என்ற தகவல் பெற்று அவரை விசாரணை செய்யவேண்டி போலீஸ் காவல் கேட்டு சிவகங்கை கணம் நீதித்துறை நடுவர் எண்–2 நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். 27.02.2013 ம் தேதி 15.30 மணி முதல் 01.03.2013 ம் தேதி 3 நாட்கள் 2 ம் எதிரி சதிஷை போலீஸ் காவலில் எடுத்து நிலையம் கொண்டு வந்து பராவசம் ஒப்புவித்தேன். அன்று இரவு என்பதால் அன்றைய தினம் விசாரிக்காமல் மறுநாள் 28.02.2013 ம் தேதி 08.30 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் வெள்ளைசாமி, விஏஓ காஞ்சிராங்கால் குரூப் மற்றும் காஞ்சிரங்கால் கிராம உதவியாளர் தர்மன் ஆகியோர்களை வரவழைத்து அவர்கள் முன்னிலையில் எதிரி சதிஷ் என்பவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலை செய்ய பயன்படுத்திய டாடா ஏசி TN 65 L 1729 என்ற வண்டியை காணூர் கண்மாய் கருவைக்குள் வண்டியை விட்டுவிட்டு என்றும், வாத்தியாரின் வீட்டு சாவியை அவர்

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.17 18:49:22 +0530

பையிலிருந்து எடுத்து தூக்கி எறிந்துவிட்டேன் என்று சொன்னார். அதன்பேரில் எதிரி சதிஷ் என்பவரை சம்பவயிடம் அழைத்து சென்று சம்பவ இடத்தில் காலை 10.00 மணிக்கு சாவியை எடுத்து ஆஜர் செய்தார். பின்பு 12.30 மணிக்கு காணூர் கண்மாயில் வைத்து TN 65 L 1729 என்ற சந்தன கலர் டாடா ஏசி வண்டியை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் வெள்ளைச்சாமி மற்றும் தர்மன் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.11 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு கைப்பற்றபட்ட சொத்துக்களுடன் எதிரி சதிஷ் என்பவரை நிலையம் கொண்டு வந்து போலீஸ் காவல் முடித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்பு சாட்சிகள் வெள்ளைச்சாமி மற்றும் தர்மன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் அத்தாட்சியில் கைப்பறிய சான்றுபொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.26**. பின்பு 26.03.2013ம் தேதி வழக்கில் சம்பவயிடத்தில் கைப்பறிய சொதத்துக்களையும் எதிரிகளிடம் கைப்பறிய சொத்துக்களையும் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டி கணம் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 14.05.2013ம் தேதி கைப்பற்றப்பட்ட எலும்பு துண்டுகளை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு DNA Test செய்ய வேண்டி நீதிமன்றம் மூலமாக வேண்டுகோள் கொடுத்து தலைமை காவலர் திரு.லிங்கதுரை என்பவர் மூலம் அனுப்பிவைத்தேன். அன்றே இறந்துபோன பெத்தலிஸ் என்பவரின் 2 வது மகள் ஜெமிலாகிரேஷ் என்பவரை மரபணு சோதனைக்கு உட்படுத்த வேண்டியிருப்பதால் அவரை நீதிமன்றம் மூலமாக அழைப்பாணை வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்பு 19.06.2013ம் தேதி சாட்சிகள் மரியராணி மற்றும் ஜெமிலாகிரேஷ் ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.07.2013ம் தேதி சாட்சி லிங்கதுரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 30.07.2013ம் தேதி எனக்கு பணிமாறுதலில் சென்றுவிட்டேன். என்னுடைய விசாரணையில் சாட்சிகள் நாராயணன், மலைச்சாமி ஆகியோர்கள் குவிமுச பிரிவு 161(3)ன் படி சொல்லியுள்ளவாறே வாக்குமூலம் கொடுத்தார்.

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.11.17 18:49:36 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

19.02.2013ம் தேதி என் விசாரணை ஆரம்பித்துவிட்டேன் என்றால் சரிதான்.

19.02.2013ம் தேதி வாதி கொடுத்த புகாரில் எலும்பு துண்டுகளை தவிர போர்வை சட்டையும் தவிர வேறு எந்த பொருளும் சம்பவயிடத்தில் கிடந்ததாக குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரிதான். 19.02.2013ம் தேதிக்கு பின்பு எதிரிகள் புகார்தாரரிடம் ஆஜராகி வாக்குமூலம் கொடுக்கும் நாளுக்கு இடையில் இந்த எதிரிகள் தான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்று என் விசாரணையில் தெரியவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் என்னிடம் கொடுத்த மறு வாக்குமூலத்தில் எதிரிகள் எந்த தினத்தில் ஆஜராகி சொன்னார்கள் என்பதை இடைச்சருகலாக சேர்த்திருக்கிறேன் என்றால் சரிதான். சாட்சிகளின் வாக்குமூலங்கள் அனைத்தும் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேலே இடைச்சருகலாக சேர்க்கப்பட்டது எழுதப்பட்டது என்றால் சரிதான். எதிரி செந்தில் விஏஓவிடம் ஆஜராகி எந்தவித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் பின்னிட்டு இந்த வழக்கிற்கு தோதுவாக எதிரி வாக்குமூலம் கொடுத்ததாக பொய்யாக சேர்த்து வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் புகார் கொடுத்தவுடன் சம்பவிடத்தை பார்வை யிட்டு பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தேனா என்றால் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜரில் நைலான் கயிறு, பெல்ட், மண்ணெண்ணெய் கேன், சிவப்பு நிற உருண்டை கல் இருந்ததாக குறீப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நைலான் கயிறு, பெல்ட், மண்ணெண்ணெய் கேன், சிவப்பு நிற உருண்டை கல் போன்ற பொருட்கள் அங்கு இல்லை என்றும் எனவே தான் நான் பார்வை மகஜரில் குறிப்பிடவில்லை என்றும் அவைகள் எதிரிக்கு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரி செந்தில் விஏஓ–விடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஏன் விஏஓ–விடம் தானாக முன்வந்து வாக்குமூலம் கொடுத்தார் என்று சொன்னதாக விஏஓ என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்துபோன நபர் பல்வேறு பெண்களுடன் தொடர்பில் இருந்தார் என்று இறந்துபோன நபரின் மனைவி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த மாதிரி தொடர்பில் இருந்த பெண்கள் அவர்களடன் ஏதாவது பிரச்சனை இருந்ததா என்று அது சம்பந்தமாக யாரையாவது விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறேனா என்றால் இல்லை. இறந்துபோன நபரின் மனைவியும் இறந்துபோன நபரும் 4 வருடமான பிரிந்து வாழ்ந்து வந்ததாக என்னிடம் கொடுத்த வாக்குமூலததில்

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.17 18:49:45 +0530

சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். அவர்கள் பிரிந்து வாழ்ந்து வருவது சம்பந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை சம்பந்தமாக நான் விசாரித்து ஏதேனும் முன்விரோதம் உள்ளதா என்று வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறேனா என்றால் இல்லை. 4 வருடம் பிரிந்திருக்கும் இறந்தவரின் மனைவி எவ்வாறு அவரது உடைகளை அடையாளம் காட்டினார் என்று இறந்துபோனவரின் மனைவியிடம் கேள்வி பதில் முறையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறேனா என்றால் இல்லை. கடைசியாக இறந்த நபரை அவர் மனைவி எப்போது பார்த்தார் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறாரா என்றால் இல்லை. எந்த ஒரு சாட்சியும் அந்த இடத்தில் மண்ணெண்ணெய் கேன் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி விஏஓவிடம் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் அன்று விஏஓ தலையாரியை தவிர வேறு தனிப்பட்ட நபர்கள் இருந்ததாக அவரது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த எதிரிகளுக்கும் இறந்துபோன நபருக்கும் முன்விரோதம் இருந்ததாக நான் விசாரித்த சாட்சிகள் யாரும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும் இறந்துபோன நபருக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்ததாக எந்தவொரு புகாரும் எந்தவொரு காவல்நிலையத்திலும் இல்லை என்றால் சரிதான். நான் விசாரணை செய்த எந்தவொரு சாட்சியும் கடைசியாக இறந்துபோன நபரை எதிரிகளுடன் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இறந்துபோன நபருக்கும் கடன் கொடுத்து வாங்கியதாக எந்தவொரு சாட்சியும் சொல்லவில்லை என்றும், ஆவணமும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி நாராயணனை நான் விசாரிக்கும் போது எறிந்த நிலையில் எலும்பு துண்டுகள் கிடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. டாடா ஏசி வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தியதை பார்த்ததாக எந்தவொரு சாட்சியும் என்னிடத்தில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதோன். மண்ணெண்ணெய் கேன், சாவி ஆகியவைகள் பார்வையில் படும்படியாக பொதுவான இடத்தில் கிடந்ததாக அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 19.02.2013 ம் தேதி மதியழகன் என்பவர் முன்பு தயார் செய்த பார்வை மகஜா மூலம் எந்த சான்றுபொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஆனால் அதே இடத்தில் மறுநாள் 6 சான்றுபொருட்கள் கைப்பற்றியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 1 வது

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.17 18:49:53 +0530

எதிரி பணங்காடியை சேர்ந்தவர் என்பதற்கு எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்தவரை கடைசியாக பார்த்ததாக எந்தவொரு சாட்சியும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலங்களும், எந்தவொரு சான்றுபொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அரசு தரப்பு வழக்கின் படி 1வது எதிரி விஏஓ–விடம் ஆஜராகி எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நான் விசாரணை ஆரம்பித்த பிறகு எதிரிகளை பொய்யாக இந்த வழக்கில் சேர்த்து அதற்கு ஏற்றாற்போல் அ.சா.1 யிடம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பொய்யாக தாயர் செய்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இறந்துபோன நபருக்கும எந்தவித முன்விரோதம் இல்லை என்றும், அதை சரிவர விசாரணை செய்யாமல் இந்த எதிரிகளை பொய்யாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் இந்த நபர் தான் என்று நிரூபிக்க SUper Imposision சோதனை நடவடிக்கை எடுக்க முயற்சி செய்தேன் என்றால் DNA பரிசோதனை செய்தேன். DNA அறிக்கையில் 0.1 சதவீத மாறுபாட்டில் இறந்த நபர் வேறு நபராக இருக்கக்கூடும் என்பது சம்பந்தமாக விசாரணை செய்து தெரிந்துகொண்டேனா என்றால் வாய்ப்பில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(**மறு விசாரணை இல்லை**)**

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.17 18:50:01 +0530

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.17 18:50:10 +0530